**A**

**CCE RR/PR/PF/**
**NSR/NSPR**
**FULL SYLLABUS**

ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ,
ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD,**
**MALLESHWARAM, BENGALURU – 560 003**

ಆಗಸ್ಟ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 3

**AUGUST 2024 EXAMINATION - 3**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

**MODEL ANSWERS**

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T** CODE NO. : **10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ /
ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)

**(Regular Repeater / Private Repeater / Private Fresh / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : **02. 08. 2024 ]** **[ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100**

**Date : 02. 08. 2024 ]** **[ Max. Marks : 100**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் : 6 × 1 = 6**

1. அறத்தினூஉங் காக்கமும் இல்லை - அறத்தினூஉங் என்பது

   (A) செய்யுளிசை அளபெடை

   (B) சொல்லிசை அளபெடை

   (C) உயிரளபெடை

   (D) ஒற்றளபெடை

   ***Ans. :***

   (C) உயிரளபெடை

2. கந்தன் பாடம் படித்தான். கந்தன் என்பது

   (A) பெயர்ச்சொல் (B) வினைச்சொல்

   (C) இடைச்சொல் (D) உரிச்சொல்

   ***Ans. :***

   (A) பெயர்ச்சொல்

3. பைந்தமிழ்

(A) வினைத்தொகை (B) பண்புத்தொகை

(C) உம்மைத் தொகை (D) உவமைத் தொகை

***Ans. :***

(B) பண்புத்தொகை

4. ஆற்று நீர் சலசல என்று ஓடியது. இத்தொடரில் சலசல என்பது

(A) அடுக்குத்தொடர் (B) வினையெச்சம்

(C) வினைமுற்று (D) இரட்டைக்கிளவி

***Ans. :***

(D) இரட்டைக்கிளவி

5. ஐந்து சீர்களைக் கொண்டது

(A) குறளடி (B) நெடிலடி

(C) கழிநெடிலடி (D) சிந்தடி

***Ans. :***

(B) நெடிலடி

6. வெற்றி பெற்ற வீரனின் நற்பண்புகளைப் பாடுவது

(A) வெட்சி (B) கரந்தை

(C) பாடாண் (D) வஞ்சி

***Ans. :***

(C) பாடாண்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புக : 4 × 1 = 4**

7. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினாரா ? வினா வாக்கியம்;
ஆஹா ! என்னே இந்த மலையின் அழகு ! : .......................... .

***Ans. :***

உணர்ச்சி வாக்கியம்

8. பாடம் படித்தேன் - இறந்த காலம்;
   நாளை வருவேன் : .......................... .

   ***Ans.* :**

   எதிர்காலம்

9. களபம் என்பதன் பொருள் சந்தனம்;
   பரி என்பதன் பொருள் : .......................... .

   ***Ans.* :**

   குதிரை

10. தாமரை சூடினாள் பொருளாகு பெயர்;
    வற்றல் உண்டான் : .......................... .

    ***Ans.* :**

    தொழிலாகு பெயர்

**III. ஒரு தொடரில் விடை தருதல் : 7 × 1 = 7**

11. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

    ***Ans.* :**

    இந்திய நாடு என்னுடைய நாடு

12. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

    ***Ans.* :**

    என்னிடம் எதுவும் இல்லை என்று சோம்பி இருப்பவரைக் கண்டு

13. சீதை அனுமனிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

    ***Ans.* :**

    சூளாமணி

14. திரு.வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?

    ***Ans.* :**

    நூற்றுக்கணக்கான நூல் குறிப்புகளை ஒரே மேடையில் கூறும் ஆற்றல் உடையவர்.

15. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?

***Ans.* :**

தனக்கென வாழ்வோர், பிறர்கென வாழ்வோர்.

16. மலேசியாவின் தலைநகரம் எது ?

***Ans.* :**

கோலாலம்பூர்

17. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

***Ans.* :**

ஆதிபுராணம், விக்கிரமார்ச்சுன விஜயம்

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல் : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

***Ans.* :**

இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ என்று பிறர் பேசும்படி செய்வது. 2

19. இளையான்குடி மாறர் விருந்தனராகிய தபோதனரை வரவேற்று உபசரித்தமையைக் குறிப்பிடுக.

***Ans.* :**

i) விருந்தினராகிய இறைவனை வரவேற்று, திருமேனியில் ஈரம்போக்கி 1

ii) தவசின் மீது அமரச் செய்தார் 1

20. சங்கத் தலைவி என்ன சமைத்தாள் ?

***Ans. :***

i) தலைவி கட்டித் தயிரை தன் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் பிசைந்தாள் 1

ii) புகை மணக்க தாளித்து புளிப்பை உடைய குழம்பை சமைத்தாள். 1

21. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

***Ans. :***

i) பட்டங்கள் ஆள்வதும் 1

ii) சட்டங்கள் செய்வதும் 1

22. நீதிச்சாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

***Ans. :***

i) கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் இது ஒரு ஓலைச்சுவடி 1

ii) 'மரம் வளர்த்தால் நரகம் இல்லை' என்று எழுதப்பட்டிருந்தது. 1

23. இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

***Ans. :***

i) கழுதையில் சவாரி செய்கிறவன் கழுதையின் வாயருகில் கேரட்டை காட்டிக் கொண்டே 1

ii) போவதைப் போல, இளைஞன் இலட்சியத்தை காட்டிக் கொண்டே வழி நடத்த வேண்டும். 1

24. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

***Ans. :***

அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய்காய்க்கும் - அது நெருஞ்சி. 2

25. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? சான்று தருக.

***Ans. :***

i) சொற்கள் பல அடுக்கி வரும். 1

ii) பிரிக்க முடியும்; பிரித்தால் பொருள் தரும். விரைவு, அச்சம் பொருளில் வரும். (எ.கா.) தீ, தீ, தீ 1

26. செய்யுளில் எதுகை, மோனை என்பதை விளக்குக.

***Ans. :***

i) செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது - மோனை. 1

ii) செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது - எதுகை. 1

27. அடி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

***Ans. :***

i) தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது அடி எனப்படும். 1

ii) அது குறளடி, சிந்தடி அளவடி, நெடிலடி, கழி நெடிலடி என ஐந்து வகைப்படும். 1

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் : $4 \times 3 = 12$**

28. இலங்கையில் சீதை இருந்த நிலைபற்றி அனுமன் கூறியவற்றை எழுதுக.

***Ans. :***

i) பேய்களும் கண்டு அஞ்சும்படியான அரக்கியர் கூட்டம் 1

ii) இரக்கம் என்னும் பண்பு ஒரு பெண்ணின் வடிவம் பெற்று 1

iii) கொடுமை மிக்க சிறைக்குள்ள சிக்கிக்கொண்டதைப் போன்று 1

29. இயல்பு கவிதையின் பொருட்சிறப்பில் மூன்றினை எழுதுக.

***Ans. :***

i) வாலை ஒட்ட நறுக்கினாலும் நாயின் நன்றி காட்டும் பண்பு 1

ii) வைக்கோல் அடைந்த கன்றை வருடி பால் சுரக்கும் தாய் பசு 1

iii) சோற்று கவளம் கண்டதும் கூடி உண்ணும் காகம் 1

30. கிராமத்து பெண் குழந்தைத் தொழிலாளர் பற்றி கி.ராஜநாராயணன் என்ன கூறுகிறார் ?

***Ans. :***

i) அசந்துத் தூங்கிக் கிடக்கும் பெண் குழந்தைகள் சூடு போட்டது போல் 1

ii) பதறி எழுந்து, எவர்சில்வர் தூக்குச் சட்டியையும், டப்பாவையும் எடுத்துக் கொண்டு 1

iii) எறும்பு புற்றுக்குள் நுழைவது போல வரிசையாக பஸ்சுக்குள் அடைவார்கள். 1

31. தமிழ் நாட்டரசர்களைப் பழித்த ஆரிய மன்னர்களுக்கு எதிராகச் செங்குட்டுவன் உரைத்த சூளுரையினைக் கூறுக.

***Ans.* :**

i) எம் கைவாள் பரம்பரை வாள் ! வெற்றி வாள் ! வீர வாள் ! 1

ii) எம் பத்தினி தெய்வம் சிலை வடிக்க ஒரு கல்லை வடவரசர் முடித்தலை ஏற்றி கொண்டு வராது மீள்வேனேல் 1

iii) பகை கண்டு அஞ்சும் பேதை என்றோ, கோழை என்றோ அழையுங்கள். 1

**VI. குறிப்பு வரைதல் : 2 × 3 = 6**

32. புரட்சிக்கவி பாரதியார்

***Ans.* :**

i) இயற்பெயர் : சுப்பிரமணியன் ஆறு வயதிலே கவி பாடும் ஆற்றல் பெற்றதால் 'பாரதி' என்ற பட்டம். 1

ii) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்தவர். 1

iii) தேசிய கவி, மகா கவி, முண்டாசு கவி என போற்றப்பட்டவர். 1

33. பழமொழி நானூறு

***Ans.* :**

i) பழமை + மொழி = பழமொழி 1

ii) நானூறு பாடல்களைக் கொண்டது. நீதி நூல்களுள் ஒன்று. 1

iii) ஒரு பாடலுக்கு ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் முன்னுறையரையனார். 1

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

34. வேற்றுமை அணி

***Ans.* :**

அணி இலக்கணம் : ஒற்றுமை உடைய இரண்டு பொருளைக் கூறி ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்துவது.

(சான்று) : தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு

அணி பொருத்தம் : தீயும் சுடும்; தீய சொல்லும் சுடும்; இது ஒற்றுமை. தீப்புண் ஆறிவிடும்; தீய சொல் ஆறாது, இது வேற்றுமை.

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குதல் : 3 × 3 = 9**

35. ''ஈன்று புறந்தருதலென் றலைக் கடனே''

***Ans.* :**

இடம் : புறநானூறு 1

விளக்கம் : குழந்தைப் பெற்று எடுப்பது தாயின் கடமை. 2

36. ''எம் தமிழ் பாவையைச் சுமந்து செல்லுங்கள்''.

***Ans. :***

இடம் : கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன். 1

விளக்கம் : தமிழ் நாட்டரசர்களைப் பழித்த வரவரசர்கள் தலையில் கல்லை ஏற்றி வைத்து செங்குட்டுவன் கூறியது. 2

37. ''இவர் என் தலையாய நண்பர்களுள் ஒருவர்''.

***Ans. :***

இடம் : அறுசுவை உரையாடல் 1

விளக்கம் : சேதுப்பிள்ளையவர்கல் தன்னைக் காணவந்த நண்பர் தலை வழுக்கையாய் இருந்தது. தன் ஆராய்ச்சி மாணவரிடம் தன் தலையை தடவிக் கொண்டு இவ்வாறு கூறினார். 2

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

38. ''இறைக்க இறைக்க ஊறும் கிணறு''.

*அல்லது*

''தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை''.

***Ans. :***

இறைக்க இறைக்க கிணற்றில் நீர் ஊறுவதைப் போல பல நூல்களைப் படிக்க, படிக்க அறிவு வளரும். 3

*அல்லது*

***Ans. :***

கல்வி அறிவு, ஒழுக்கம் போன்ற நல்ல பண்புகளை மதிப்பீடு செய்து பெரியோர் இவ்வாறு கூறுவர். 3

**X. அடிபிறழாமல் எழுதுதல் : 1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் .....'' எனத் தொடங்கும் 'திருவாசகப்' பாடலை எழுதுக.

*அல்லது*

''ஏட்டையும் பெண்கள் ..... '' தலைகவிழ்ந்தார் என்னும் கும்மி பாடல்''.

***Ans. :***

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம் 2
அறுக்கும் ஆனந்த மா கடலே

தீது இலா நன்மைத் திருவருள் குன்றே
திருப் பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவது ஓர் வகை அருளாய் 2
வந்து நின் இணை அடி தந்தே. - மாணிக்கவாசகர்

*அல்லது*

***Ans. :***

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி யிருந்தோர் மாயந்துவிட்டார் 2
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்த மனிதர் தலைகவிழ்ந்தார். 2

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் : 2 × 4 = 8**

40. வள்ளுவர் அறத்தை வலியுறுத்துவதை விளக்கி வரைக.

***Ans. :***

i) அறத்தை விட சிறந்த செல்வம் இல்லை. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அறம் செய்ய வேண்டும். 1

ii) மனதில் குற்றம் இல்லாதிருத்தலே சிறந் அறம் 1

iii) பொறாமை, பேராசை, கடுங்கோபம், கடுஞ்சொல் இவற்றை நீக்கி வாழ்வது அறமாகும். 1

iv) அறவழியில் பெறும் இன்பமே சிறந்தது. 1

41. இலங்காவியின் கீழுலக விந்தைகளை விவரி.

*அல்லது*

தமிழ் இதழ்களும் விடுகதைகளும் குறித்து பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் கூறுவன யாவை ?

***Ans.* :**

i) ஆமை வகைகள், நண்டு வகைகள், பலவண்ண மீன்கள், 1

ii) குட்டித் திரையரங்கும் என ஓர் உலகமே பூமிக்கடியில் 1

iii) நாலாயிரம் மீன் வகைககள். ஒவ்வொரு வகையும் ஒரு கண்ணாடி பேழைக்குள். 1

iv) அதன் நிறமும், செயல்பாடும் வேறுவேறு குட்டித்திரையரங்கில் 30 நிமிட குறும்படம் ஓடும். 1

*அல்லது*

***Ans.* :**

i) விடுகதைகள் பரவலாக இடம்பெற்ற காலம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி. 1

ii) ஆங்கிலேயரே இந்திய நாட்டுப்புற இலக்கியங்களை ஏட்டில் கொண்டு வர உதவினார். 1

iii) விவேக சிந்தாமணி, கலா சிந்தாமணி, செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், தாமரை, ராணி, அரும்பு 1

iv) தமிழரசு, கொங்கு போன்ற மாத இதழ்களும், சிறுவருக்கான இதழ்களும் இலக்கியத்தை வளர்த்தன. 1

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல் : 1 × 4 = 4**

42. ''விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''.

***அல்லது***

''பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும் - நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும் தன் வாயால் கெடும்''.

***Ans. :***

i) வானத்திலிருந்து மழைத்துளி விழவில்லை என்றால் புல்லைக் கூட பசுமையாகக் காண முடியாது. 2

ii) ஒருவர் செய்த நன்மையை மறக்கக்கூடாது. தீமையை அப்போதே மறந்து விட வேண்டும். 1

iii) சொல்லுதல் எளிது. சொல்லும் முறைப்படி செயல்படுவது கடினம். 1

***அல்லது***

***Ans. :***

i) பிறரைப் பற்றி புறம் பேசித் திரியும் அறிவிலிகள், தன் வளையினுள் இருந்து 2

ii) சத்தமிட்டு பாம்பிடம் மாட்டிக் கொள்ளும் தவளைப் போல் மாட்டிக் கொள்வர். 2

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் : (2 × 2 = 4) 1 × 4 = 4**

கிராமங்களே நமது உயிர் நாடி அவர்கள் தம் வாழ்க்கை அனுபவங்களை கற்பனை வளத்துடன் கலை வடிவில் வெளிப்படுத்தினர். நாடோடிக் கதைகள், நாட்டுப்புறக் கூத்து, பாட்டு, பழமொழிகள், விடுகதைகள் யாவும் நாட்டுப்புறக் கலைகள்.

பாகவதமேள : பாடலும் ஆடலும் இணைந்த கூத்தினை 'பாகவதமேள' என்பர். இக்கூத்தின் தலைவன் 'பாகவதன்' என்னும் பாட்டுக்காரன் ஆவான். ஆட்டக்காரர்கள் காலில் சலங்கையும் மார்பில் மாலையும் அணிந்திருப்பர்.

***வினாக்கள் :***

43. a) நாட்டுப்புறக் கலைகள் யாவை ? 2

b) 'பாகவத மேள' ஆட்டம் குறித்து எழுதுக. 2

***Ans. :***

a) நாடோடிக் கதைகள், நாட்டுப்புறக் கூத்து, பாட்டு, பழமொழிகள், விடுகதைகள். 2

b) ஆடலும் பாடலும் இணைந்த கூத்தினை 'பாகவத மேள' என்பர். கூத்தின் தலைவன் பாகவதன். ஆட்டக்காரர்கள் காலில் சலங்கையும், மார்பில் மாலையும் அணிந்திருப்பர். 2

**XIV. மடல் எழுதுதல் : 1 × 5 = 5**

44. விளையாட்டுப் போட்டியில் முதலிடம் வென்ற நண்பனைப் பாராட்டி கடிதம் எழுதுக.

*அல்லது*

உனக்கு தேவையான தமிழ் நூல்களை உன் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வைதேகி பதிப்பகத்திற்கு கடிதம் எழுதுக.

***Ans. :***

நாள் :
இடம் : 1

அன்புள்ள :
மதிப்பிற்குரிய : 1
கடிதப் பொருள் : 2

இங்ஙனம்,
எழுதுவோர் பெயர் 1

பெறுவோர் முகவரி : 1

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுல் : 1 × 5 = 5**

45. ''சந்திராயன்-3 குறித்து நீ அறிந்த செய்திகளை எழுதுக.''

*அல்லது*

''இயற்கையைப் பாதுகாப்பதில் நமது பங்கு குறித்து எழுதுக.''

***Ans.* :**

— தலைப்பிற்கேற்ற முன்னுரை 1

— தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள் 1

— கட்டுரையின் நோக்கம் நிறைவுறும் வகையில் வலியுறுத்தல் 2

— முடிவுரை 1